


24.08.2024

தலைப்புச் செய்திகள்

1. பாதுகாப்பு துறையில் தொழில் நிறுவனங்கள் அளவிலான திறன் மேம்பாடு உள்ளிட்டவற்றை முன்னெடுத்துச் செல்ல அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்றுவதை எதிர்நோக்கி இருப்பதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

2. தரமான சேவைகள் மக்களுக்கு கிடைப்பதை, தொலைதொடர்பு நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா வலியுறுத்தி உள்ளார்.

3. இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், வெளியுறவு அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

4. தமிழக கிராமங்களின் முன்னேற்றத்திற்கு மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்

5. தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் வைஷ்ணவி அத்கர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□

ராஜ்நாத் சிங்

நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்துறை பங்களிப்பை உறுதி செய்யும் வகையில் பாதுகாப்பு ஒத்துழைப்போடு, திறன் கட்டமைப்பையும் முன்னெடுத்துச் செல்ல அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்றுவதை இந்தியா எதிர்நோக்கி இருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில், அமெரிக்க ராணுவ தொழில்துறை நிறுவனங்களின் மூத்த தலைவர்களுடன் கலந்துரையாடிய அமைச்சர், அந்நாட்டின் முதலீடுகள் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பை இந்தியா வரவேற்பதாக கூறினார்.

நம் நாட்டின் மனிதவளம், அந்நிய நேரடி முதலீடுகள், வர்த்தக சூழல், பெருமளவிலான உள்நாட்டு வளர்ச்சி போன்றவை இதற்கு தயாராக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமது அமெரிக்க பயணத்தின் ஒருபகுதியாக திரு. ராஜ்நாத் சிங், அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுலிவனையும் சந்தித்து பேசியுள்ளார்

இருநாடுகளும் பரஸ்பரம் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டது.

□□□□□□□□□

ஜோதிர் ஆதித்ய சிந்தியா

தரமிகு சிறப்பான தொலைத்தொடர்பு சேவைகளை குடிமக்களுக்கு கிடைப்பதை, தொலைதொடர்பு சேவை நிறுவனங்கள் உறுதி செய்யவேண்டும் என்று மத்திய தொலைத்தொடர்பு துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா வலியுறுத்தி உள்ளார்.

புதுதில்லியில் தொலைத்தொடர்பு சேவை நிறுவனங்களின் ஆலோசனை கூட்டத்தில் பேசிய அவர், இந்தியாவின் எதிர்கால தொலைத் தொடர்பு சூழலை விரிவுப்படுத்தி உள்ளடக்கிய, ஒருங்கிணைந்த கொள்கை முடிவுகளை வகுப்பதே இந்த கூட்டத்தின் முக்கிய நோக்கம் என்று குறிப்பிட்டார்.

6-ஜி சேவை, தொலைத்தொடர்பு துறையில் ஆராய்ச்சி, தர மேம்பாடுகளை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்லும் நடைமுறைகள் குறித்து திரு. சிந்தியா இந்த கூட்டத்தில் விவாதித்தார்.

100 சதவிகித அகன்ற அலைவரிசை சேவையை முன்னெடுத்துச் செல்லும் வகையில் முலீடுகளை ஊக்குவிப்பதற்கான கொள்கை வகுக்கப்பட வேண்டுமென்று தொலைத்தொடர்பு நிறுவனங்கள் கோரியுள்ளன.

□□□□□□□□

மன் கி பாத்

பிரதமர் திரு. நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 113-வது முறையாக நாளை காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

ஆகாஷவாணியின் அனைத்து அலைவரிசைகள், தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூ டியூப் அலைவரிசைகளில் பிரதமரின் உரை நேரடியாக ஒலிபரப்பாகும்.

□□□□□□□□

நேபாள விபத்து

நேபாளத்தில் பேருந்து கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்திய தூதரகத்தின் மூலம் அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என பிரதமர் தமது சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.

இதனிடையே இவ்விபத்தில் காயமடைந்து காட்மண்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை மத்திய இளைஞர்நலன் இணையமைச்சர் ரக்ஷா நிகில் காட்சே இன்று நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். இச்சம்பவத்தில் 27 இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்திய தூதரக அதிகாரிகளுடன் மீட்பு பணிகள் குறித்து விவாதித்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் காயமடைந்துள்ள 16 பேரை விமானம் மூலம் காட்மண்டுவிற்கு சிகிச்சைக்காக கொண்டு செல்ல பட்டுள்ளதாகவும் கூறினார்.

□□□□□□□□

கல்வி அமைச்சகம்

நாட்டிலுள்ள பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த வழிகாட்டுதல்களை அமல்படுத்த வேண்டுமென்று மாநில அரசுகளுக்கு மத்திய கல்வி அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது.

2021-ம் ஆண்டு வகுக்கப்பட்ட பள்ளி பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகளை அமல்படுத்த வேண்டுமென வலியுறுத்தப் பட்டுள்ளது

இதுகுறித்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் போக்சோ வழிகாட்டு நெறிமுறைகளை உள்ளடக்கி இந்த பள்ளி பாதுகாப்பு நெறிமுறை உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு பள்ளி நிர்வாகமும் பொறுப்பேற்கும் வகையில் விதிகள் திருத்தப்பட்டுள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.

□□□□□□□□

### முதலமைச்சர் - கடிதம்

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் விடுவிக்க உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தி உள்ளார்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கருக்கு இன்று எழுதிய கடிதத்தில், நாகையை சேர்ந்த 11 மீனவர்களையும் அவர்களது மீன்பிடி விசை படகுகளையும் இலங்கை படையினர் சிறை பிடித்துள்ளது மிகவும் கவலை அளிப்பதாக கூறியுள்ளார்.

இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 324 மீனவர்களும், 44 படகுகளும் இலங்கை படையினரால் சிறைபிடிக்கப் பட்டுள்ளதாக கூறியுள்ள முதலமைச்சர் இந்த தொடர் கைது நடவடிக்கை மீனவ சமூக மக்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2 வாரங்களில் இலங்கையை சேர்ந்த அடையாளம் தெரியாத நபர்கள் கடலில், மீனவர்களை தாக்கிய சம்பவங்களை சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர், இந்த பிரச்சனைக்கு உடனடி தீர்வின் அவசியத்தை வலியுறுத்தினார்.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க உறுதியான தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவ கேட்டுக்கொண்டார்.

□□□□□□□□

### முருகன் மாநாடு

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவில் சார்ந்த கல்வி நிறுவனங்களில் பயிலும் 4 ஆயிரம் மாணாக்கருக்கு இந்த ஆண்டு முதல் மதிய

உணவு திட்டமும் செயல்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை காணொலி மூலம் சென்னையிலிருந்து இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், பழனிக்கு பாதயாத்திரையாக வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க சிறப்புத்திட்டம் செயல்படுத்தப் படுவதாக கூறினார்.

அரசு சார்பில் 813 பேர் அறுபடை வீடுகளுக்கு ஆன்மீக சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், திமுக ஆட்சிக்கு வந்தபின்னர் திருக்கோவில்களுக்கு சொந்தமான ஆக்கிரமிப்பு நிலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

8 ஆயிரத்து 436 திருக்கோவில்களில், மூன்றாயிரத்து 776 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோவில்களில் திருப்பணிகள் நடைபெற்றதை சுட்டிக்காட்டினார்.

திருக்கோவில்களில் தினந்தோறும் 82 ஆயிரம் பேருக்கு அன்னதான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக சுவாமி முருகனின் அறுபடை வீடுகள் தொடர்பான சிறப்பு கண்காட்சி அரங்கு திறந்து வைக்கப்பட்டது.

இம்மாநாட்டு வளாகத்தில் வேல் அரங்கம், அருள்தரும் அறுபடை முருகனின் மூலவர் காட்சிகள், மெய்நிகர் காட்சிகள், முப்பரிமான பாடல் அரங்கம் உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன.

நிகழ்ச்சியில் மாநில அமைச்சர்கள் திரு. சேகர்பாபு, திரு. பெரியசாமி, திரு. சக்கரபாணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

□□□□□□□□

பெரியகருப்பன்

தமிழகஅரசு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் கூறியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் கலுங்குபட்டி கிராம ஊராட்சியில் 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நாடக மேடையை திறந்து வைத்து பேசியஅவர், மாநில அரசு கிராமங்களின் மீது தனி கவனம் செலுத்தும் வகையில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் ! நமக்குநாமே ! போன்ற பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

□□□□□□□□□

ரகுபதி

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 10 பேருக்கு தலா 8 கிராம் தங்க நாணயங்களையும்,

51 பேருக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட வாகனங்களையும் மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி இன்று வழங்கினார்.

அப்போது பேசியஅவர், தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளை அனைவரும் உரிய முறையில் பெற்று பயனடைய வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் கால்நடை மருத்துவ ஊர்திகள் சேவையையும் அமைச்சர் தொடங்கி வைத்தார்.

□□□□□□□□□

சிவசங்கர்

பெரம்பலூர் மாவட்டம் வேள்வி மங்கலம் கிராமத்தில் முதலமைச்சரின் கிராமசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 94 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அம்மாகுளம் முதல் ஆற்றுப்பாதை வரையிலான தார்சாலை அமைக்கும் பணிகளை மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ளு.ளு. சிவசங்கர் தொடங்கிவைத்தார்.

□□□□□□□□□

மு.பெ.சாமிநாதன்

தமிழில் உள்ள 70 விழுக்காடு சொற்களுக்கு வேர்ச்சொல் கண்டறியப்பட்டுள்ளதாகவும், இதனை 100 சதவீதமாக நிறைவு செய்யவேண்டுமென்றும் தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சாமிநாதன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

சென்னையில் அகர முதலி இயக்கக செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் பேசியஅவர், அகர முதலி இயக்கக பொன்விழா ஆண்டை இந்த ஆண்டு தமிழ் அகராதியியல் நாள் விழாவோடு இணைத்து கொண்டாடவும் கேட்டுக்கொண்டார்.

□□□□□□□□□

ஹைப்ரிட் ராக்கெட்

இந்தியாவின் முதலாவது ஹைப்ரிட் ராக்கெட் ரூமி - 1 வெற்றிகரமாக இன்று விண்ணில் செலுத்தப்பட்டு பூமிக்கு திரும்பியுள்ளது.

தனியார் விண்வெளி ஆய்வு நிறுவனங்கள் வடிவமைத்த இந்த மறு பயன்பாட்டிற்கான ராக்கெட் 3 செயற்கை கோள்களுடன் சென்னை திருவிடந்தை கடற்கரையிலிருந்து நடமாடும் ஏவுதளம் மூலம் இன்று காலை மணி 7.02 க்கு வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

சுற்றுப்பாதையில் நுழையாமல் பூமிக்கு மீண்டும் திரும்பிய இந்த ராக்கெட், தமிழக ஸ்டார்ட் அப் நிறுவனம் சார்பில் தயாரித்துள்ளது

காஸ்மிக் மற்றும் புற ஊதா கதிர்வீச்சு, காற்றின் தரம், வளிமண்டல மாற்றங்களை கண்காணிக்கும் பணிகளை இந்த 3 செயற்கைகோள்களும் மேற்கொள்ளும்.

□□□□□□□□□

இருவரி

திருச்சி பெரியார் ஈ.வே.ரா. கல்லூரியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் இளைஞர் திறன் திருவிழா உடன் கூடிய வேலைவாய்ப்பு முகாம் வரும் 31-ம் தேதி நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் மண்ணுயிர் காத்து ! மன்னுயிர் காப்போம் ! திட்டத்தில் இயற்கை இடுபொருள் தயாரிப்பு குழு ஒன்றுக்கு தலா ஒருலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுவதாக ஆட்சித் தலைவர் திருமதி. ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வரும் 30-ம் தேதி நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் கவிஞரின் நினைவு நாளையொட்டி கவிஞர் நினைவு இல்ல நூலகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு அமைப்புகள் சார்பில் அன்னாருக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிக்கு இணையவழியில் விண்ணப்பிப்பதற்கான சிறப்பு முகாம் அண்ணா விளையாட்டரங்கில் இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

□□□□□□□□□

சிறுத்தை - வாய்ஸ்

தேனி மாவட்டம் கம்பம் பகுதியில் இன்று சிறுத்தை நடமாட்டம் இருப்பது தெரியவந்ததை அடுத்து பொதுமக்கள் வீட்டை விட்டு தேவையின்றி வெளியே வரவேண்டாம் என வனத்துறை அறிவுறுத்தி உள்ளது.

சிறுத்தையை கண்காணிக்கும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

.. வாய்ஸ் ..

□□□□□□□□

கோவில்

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் ஆவணி திருவிழா இன்றுகாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

□□□□□□□□

டென்னிஸ்

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் வைஷ்ணவி அத்கர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற அரையிறுதி போட்டியில் அவர் ஜப்பானின் ரினா சாய்கோவை 6 - 0, 6 - 3 என்ற நேர் செட்களில் வென்றார்.

□□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

□□□□□□□□